முற்பகல் 11-55

3. முந்தைய நாள் பேரவை நடவடிக்கைக் குறிப்பில் சில வார்த்தைகளை நீக்கியது—*தொடர்ச்சி*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர், சொல்லுங்கள்.*

திரு. துரைமுருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்று நான் முன்னாள் முதலமைச்சர் அம்மையார் அவர்களது பெயரைச் சொன்னேன் என்பதற்காக ** பேசினீர்களே, இன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே ** என்று சொன்னாரே, அவருக்கு என்ன தண்டனை கொடுத்தீர்கள்?*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நேற்றைக்கே அது முடிந்துவிட்டது, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) இல்லை, உட்காருங்கள். பரவாயில்லை, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) இல்லை, ஒத்துழையுங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) இல்லை, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே அதனை திராவிட முன்னேற்றக் கழக அரசாங்கம் என்று திருத்திக்கொள்ளலாம் என்று சொல்லிவிட்டார், அது அவ்வாறே திருத்திக்கொள்ளப்படுகிறது. உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள், அது அவ்வாறு திருத்திக்கொள்ளப்படுகிறது.*

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் இருக்கைக்கு அருகில் வந்து நின்றனர்.)

உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உறுப்பினர்கள் அனைவரும் உங்கள் இடத்திற்குச் செல்லுங்கள். (குறுக்கீடுகள்) முதலில் உங்கள் இடத்திற்குச் செல்லுங்கள் (குறுக்கீடுகள்) நான்தான் பதிவு செய்து விட்டேன் அல்லவா? பிறகு என்ன பிரச்சினை? பேரவைத் தலைவர் பதிவு செய்துவிட்ட பிறகு என்ன பிரச்சினை இருக்கிறது? (குறுக்கீடுகள்) நீங்கள் உங்கள் இருக்கைக்குச் செல்லுங்கள். பேரவைத் தலைவரின் இருக்கையின் அருகில் உறுப்பினர்கள் வருவதே தவறான செயலாகும். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் திரு. அன்பழகன், நீங்கள் உங்கள் இருக்கைக்குச்

** *மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

செல்லுங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் எது பேசுவதாக இருந்தாலும் உங்கள் இருக்கைக்குச் சென்று பேசுங்கள். (குறுக்கீடுகள்) முதலில் நீங்கள் செல்லுங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. புகழேந்தி, உங்கள் இருக்கைக்குச் செல்லுங்கள். (குறுக்கீடுகள்) உங்கள் இருக்கைக்கு செல்லுங்கள். (குறுக்கீடுகள்) அனைவரும் உங்கள் இருக்கைக்குச் செல்லுங்கள். (குறுக்கீடுகள்) இருக்கைக்குச் செல்லுங்கள், மாண்புமிகு உறுப்பினர் திரு. அன்பழகன். (குறுக்கீடுகள்) நீங்கள் இருக்கைக்குச் செல்கிறீர்களா அல்லது உங்கள்மேல் நடவடிக்கை எடுக்கட்டுமா? (குறுக்கீடுகள்) உங்கள் இருக்கைக்குச் செல்லுங்கள். (குறுக்கீடுகள்) பேரவையை நடத்துவதற்கு இவ்வாறு ஒத்துழைப்பு கொடுக்காமலிருந்தால் எப்படி அவையை நடத்த முடியும்? இருக்கைக்குச் செல்லுங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள், அவருடைய கோரிக்கையாக இங்கு ஒரு செய்தியைச் சொன்னார்கள். அதற்கு மாற்று ஏற்பாடு வேண்டும் என்ற தொனியில்தான் அதைச் சொன்னார்கள். மாற்று ஏற்பாட்டை மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்கள் அவையில் Ruling ஆக சொல்லிவிட்டார்கள். அதற்குமேல் இதுகுறித்து இங்கு பிரச்சினை எழ வாய்ப்பில்லை. (குறுக்கீடுகள்) ஆகவே, தி.மு.க. உறுப்பினர்கள் தயவுசெய்து அமைதியாக அமரும்படி கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதுதான் திருத்தியாயிற்றே, பிறகென்ன? (குறுக்கீடுகள்) உங்களுக்கு நடந்த விவரம் தெரிந்தால் பரவாயில்லை. தெரியாமலேதான் பேசுகிறீர்கள். (குறுக்கீடுகள்) நான்தான், திருத்திவிட்டேன் என்று சொல்லிவிட்டேன். அதற்குப் பிறகு என்ன இருக்கிறது? அவ்வளவுதான். நான்தான் அதனை திராவிட முன்னேற்றக் கழக அரசாங்கம் என்று திருத்தி மாற்றிப் பதிவு செய்துவிட்டேன், உட்காருங்கள். ஒன்றும் இல்லை, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள், உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமசாமி அவர்கள், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) இல்லை, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு statement-ஐ இந்த அவையின்முன் வைக்கிறார். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், statement வையுங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) இல்லை, இது வேறு பொருள் குறித்து.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முக்கியமான பிரச்சினை குறித்து. . . (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இந்தப் பொருள் குறித்தது அல்ல. வேறு பொருள் குறித்தது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேறு பிரச்சினை குறித்தது. இது இல்லை. வேறு பிரச்சினை. (குறுக்கீடுகள்)*

9. பவானி ஆற்றின் குறுக்கே கேரள அரசு தடுப்பணைகள் கட்ட எடுக்கும் முயற்சிகளை நிறுத்துவதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்த மாண்புமிகு முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *என்ன நீங்கள், உட்காருங்கள் நீங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமசாமி அவர்கள், உட்காருங்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு* statement-*ஐ இந்த அவையில் வைக்கிறார், உட்காருங்கள். எது பேசுவதாக இருந்தாலும் பிறகு வாய்ப்பு தருகிறேன், நீங்கள் உட்காருங்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு* statement-*ஐ அவையின்முன் வைக்கிறார், உட்காருங்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பவானிசாகர் அணைக்கு வருகின்ற நீர் வழித் தடத்தையும், அமராவதி அணைக்கு வருகின்ற நீர் வழித்தடத்தையும் தடுத்து நிறுத்துவதற்கு பல்வேறு இடங்களில் தடுப்பணைகள் கட்டப்படுவதாக மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய கவலையினை இங்கே தெரிவித்திருக்கிறார்கள். அந்தப் பகுதியிலிருக்கின்ற விவசாயப் பெருங்குடி மக்களும் தங்கள் கவலையைத் தெரிவித்திருக்கிறார்கள். மாண்புமிகு அம்மா அவர்களது அரசு எடுத்த நடவடிக்கை குறித்து இங்கே எடுத்துக் கூறுவதற்குக் கடமைப்பட்டிருக்கின்றேன்.*

நண்பகல் 12-00

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவேரி நடுவர் மன்றம் அதன் 5-2-2007 ஆம் நாளிட்ட இறுதி ஆணையில்